தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018

SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 228 | 10.2.2026 | TUESDAY | THAI : 27 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 228 | 10.2.2026 | செவ்வாய்க்கிழமை | தை : 27 | விலை : ரூ.5/-

## ராகுல் காந்தியை பேச அனுமதிக்கக் கோரி அமளி

# “மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு!”



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்கள் (ம) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டன. அருகில் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

புதுடெல்லி: பிப்.10-

ராகுல் காந்தியை பேச அனுமதிக்கக் கோரி மக்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 9வது நாளான இன்று, மக்களவை வழக்கம்போல் காலை 11 மணிக்குக் கூடியது. அவை கூடிய சில நிமிடங்களிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவையில் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா, கேள்வி நேரம் முடிந்த பிறகு விதிகளின்படி அனைவரும் பேச அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறினார். மேலும், பட்ஜெட் மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் தனது கருத்துகளை முன்வைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.



இதை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், அவை 12 மணிக்குக் கூடியபோதும் எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அவையில் முழக்கங்களை எழுப்பினர். இதனால், அவையை 2 மணிக்கு ஒத்திவைப்பதாக அவையை நடத்திய கிருஷ்ண பிரசாத் தென்னேட்டி அறிவித்தார்.

அவைத் தலைமைப் பொறுப்பில் இருந்த சந்தியா ராய் தலைமையில் அவை மீண்டும் 2 மணிக்கு கூடியது. அப்போது, பட்ஜெட் குறித்து பேச காங்கிரஸ் எம்.பி சசி தரூருக்கு சந்தியா ராய் அழைப்பு விடுத்தார். சிறிது நேரம் பேசிய சசி தரூர், ராகுல் காந்திக்கு தனது வாய்ப்பை வழங்கினார்.

அப்போது பேசிய ராகுல் காந்தி, தான் சபாநாயகரிடம் சென்றதாகவும், அவையில் பேச சபாநாயகர் ஒப்புக்கொண்டதாகவும் கூறினார். ஆனால், அவையில் பேச ராகுல் காந்திக்கு சபாநாயகர் அனுமதி அளிப்பதாக உறுதி அளிக்கவில்லை என்று நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார். இதையடுத்து, அவையில் அமளி ஏற்பட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிரியங்கா காந்தி வதேரா, ‘‘நாங்கள் சபைக்குச் சென்றுவிட்டு சும்மா வெளியே வருகிறோம். இது மிகவும் வருத்தம் அளிப்பதாக உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு ஒரு நிமிடம் கூட அனுமதி அளிக்கப்படவில்லை. இது கேலிக்கூத்தானது. இது ஜனநாயகம் அல்ல. நாங்கள் எதற்காக இங்கு வருகிறோம்? அவரைப் பேச அனுமதிக்க வேண்டும்’’ என்று வலியுறுத்தினார்.



## சேலம் மாமன்ற கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம்

சேலம் பிப்.10

சேலம் மாநகராட்சி மன்ற அவசர கூட்டம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு துணை மேயர் சாரதாதேவி, ஆணையாளர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடைபெறாத திட்டங்களுக்கு மாநகராட்சியின் வருவாயை இழப்பு செய்வதாகவும், இயங்காத பழைய பேருந்து நிலையத்தில் உள்ள மின்தூக்கி இயந்திரத்திற்கு மாதம் செலவினத் தொகையை செலவு செய்வதாக பொய்யான கணக்கை காண்பிப்பதாகவும், குடிநீர் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் ஏமாற்றி ஊழல் செய்வதாகவும், குடிநீர் இணைப்பினை வசூல் செய்ய தனியார் மயமாக்குவதை கண்டித்தும், எனவே ஆட்சி முடியும் தருவாயில் தேவையற்ற திட்டங்களை நிறைவேற்ற துடிக்கும் இந்த திமுக அரசையும், மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்தும் மாநகராட்சி நிர்வாகத்தையும் கண்டித்து மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் யாதவ மூர்த்தி தலைமையில் அதிமுக கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

## “தவெகவை பார்த்து திமுகவுக்கு பயம்” : அருண்ராஜ் விமர்சனம்

திருச்சி: பிப்.10-

திருச்சி மன்னார்புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், மத்திய மண்டலத்திற்கான தவெகவின் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கூட்டம் தலைமை நிர்வாகி கே.ஜி.அருண்ராஜ் தலைமையில் நடைபெற்றது. ஜேசிடி பிரபாகரன், ஏ.ராஜ் மோகன், டிஎஸ்கே. மயூரி, பேராசிரியர் ஏ.சம்பத்குமார், எம்.அருள்பிரகாசம், விஜய்.ஆர்.பரணிபாலாஜி, டாக்டர் ஜெ.முகமது பர்வேஸ், டாக்டர் டிகே. பிரபு, கே.கிறிஸ்டி பிரித்வி, எம்.கே.தேன்மொழி பிரசன்னா உள்ளிட்ட குழுவினர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் விவசாயிகள், தொழில் அதிபர்கள் பங்கேற்று தவெக தேர்தல் அறிக்கையில் கொடுக்க வேண்டிய வாக்குறுதி குறித்தான மனுக்களை வழங்கினர்.

அதைத்தொடர்ந்து அறிக்கை குழு தலைவர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எந்த அரசுப் பதவியிலும் இல்லாத விஜய் செய்தது ஊழல் கிடையாது. எதை வைத்து விஜய் ஊழல் செய்தார் என எடப்பாடி பழனிசாமி பேசுகிறார் எனத் தெரியவில்லை. அவரை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

வரி ஏய்ப்பு என பொத்தாம் பொதுவாக கூறக் கூடாது. காலம் தாழ்த்தப்பட்ட ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதை சட்டப்படி எதிர்த்து மனுதாக்கல் செய்தோம். நீதிமன்ற தீர்ப்பு விவகாரத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து முடிவு எடுக்கப்படும். கூட்டணியை நம்பி தவெக தொடங்கப்படவில்லை. இருந்தாலும் கூட்டணி குறித்து இறுதி முடிவை விஜய் அறிவிப்பார்.

அரசியல் கட்சிகள் கூட்டம் நடத்துவது தொடர்பாக வழிக்காட்டல் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் திமுக கூட்டம் நடத்தினால் உடனடியாக அவர்களுக்கு அனுமதி கிடைக்கிறது. தவெகவைப் பார்த்து திமுகவுக்கு பயம் வந்துவிட்டது. அதனால் விஜய் மக்களை சந்திப்பதை தடுக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## 200 பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு : அமைச்சர் ஐ.பெரியசாமி கர்ப்பிணிப் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

சின்னாளபட்டி, பிப்.10-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் உள்ள விஜய மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் கோட்டாட்சியர் திருமலை தலைமை தாங்கினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், வட்டாட்சியர்கள் முத்துமுருகன், ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், ராஜேந்திரன், ரெட்டியார்சத்திரம் மணி, சின்னாளபட்டி



பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் தி,சு. அறிவழகன், மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சாந்தி வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது தமிழகத்தில் உள்ள கர்ப்பிணி பெண்களை தாயைப் போல காப்பாற்றி வருபவர் நம்முடைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்க முதல்கட்டமாக கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தி அவர்களின் மனதிற்கு பிடித்த உணவுகளை வழங்கி சத்தான, ஆரோக்கியமான உணவு பொருட்களை வழங்குவதோடு அவர்களுக்கு தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்.

அதன்பின்னர் 200 கர்ப்பிணி பெண்களுக்கு சத்தான உணவு பொருட்களுடன் பட்டுப்புடவை, வளையல், திருமாங்கல்ய கயிறு, மஞ்சள் கிழங்கு, குங்குமம், சந்தனம், உட்பட அனைத்து பொருட்களையும் தாய் வீட்டு சீதனமாக வழங்கினார். கர்ப்பிணி பெண்கள் இருக்கும் இடத்திற்கே சென்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் வழங்கும் போது கர்ப்பிணி பெண்கள் எழுந்துநின்ற வாங்க முயற்சிக்கையில் அவர்களை இருக்கையில் அமர வைத்து சீதன பொருட்களை வழங்கினார். ஒருசில கர்ப்பிணி பெண்கள் தங்களை தாய், தந்தை ஸ்தானத்தில் இருந்து ஆசீர்வதிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்து ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டனர்.

## அனுமதி பெறாத கொடிக் கம்பங்கள் அகற்றக் கோரிய வழக்கு: 13 மாவட்ட ஆட்சியர்கள் பதிலளிக்க உத்தரவு

மதுரை: பிப்.10-

மதுரை உட்பட 13 மாவட்டங்களில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகளை அகற்றக்கோரிய வழக்கில் 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் பதிலளிக்க உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் சாலி கிராமத்தை சேர்ந்த ராதா கிருஷ்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: “கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, விருதுநகர், மதுரை, தேனி, ராமநாதபுரம், திண்டுக்கல்,



கரூர், புதுக்கோட்டை, திருச்சி, மற்றும் தஞ்சாவூர் ஆகிய 13 தென் மாவட்டங்களில் ஏராளமான இடங்களில் அனுமதி பெறாமல் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் அரசு புறம்போக்கு இடங்கள், மாநில நெடுஞ்சாலை, கிராமச் சாலைகள் மற்றும் பொது இடங்களில் அரசியல் மற்றும் சாதி அடிப்படையிலான பிளக்ஸ் போர்டுகள், போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. பேனர்கள் கட்டப்படுகின்றன. இவைகளால் தேவையற்ற மோதல்கள் ஏற்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி விதிகளின்படி போஸ்டர்கள் ஒட்டவும், பேனர்கள், போர்டுகள் வைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். அதன்படி எந்த அனுமதியும் பெறப்படுவதில்லை.

அனுமதி பெறாமல் செயல்படுபவர்கள் மீது அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் முறையாக அனுமதி பெறாமல் அரசியல் மற்றும் சாதிய அமைப்புகளின் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகள், பேனர்கள் வைக்கப்பட்டது தொடர்பாக விசாரிக்கவும், அவற்றை அகற்றவும் உத்தரவிட வேண்டும்” இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு இன்று விசாரித்தது. அப்போது நீதிபதிகள், அனுமதி பெறாத பிளக்ஸ் பேனர்கள், கட்சி கொடிக் கம்பங்களை அகற்றுவது தொடர்பாக பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்து வழக்குகள் தாக்கலாகி வருகின்றன. மனு தொடர்பாக 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் 4 வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.



# “தவெகவை பார்த்து திமுகவுக்கு பயம்” அருண்ராஜ் விமர்சனம்

திருச்சி, பிப்.10-
“தவெகவைப் பார்த்து திமுகவுக்கு பயம் வந்துவிட்டது. அதனால் விஜய் மக்களை சந்திப்பதை தடுக்க முயற்சிக்கிறார்கள்” என்று தவெக தேர்தல் அறிக்கைக்குழு தலைவர் அருண்ராஜ் கூறினார்.

திருச்சி மன்னார்புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், மத்திய மண்டலத்திற்கான தவெகவின் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கூட்டம் தலைமை நிர்வாகி கே.ஜி.அருண்ராஜ் தலைமையில் நடைபெற்றது. ஜேசிடி பிரபாகரன், ஏ.ராஜ் மோகன், டிஎஸ்கே. மயூரி, பேராசிரியர் ஏ.சம்பத்குமார், எம்.அருள்பிரகாசம், விஜய்.ஆர்.பரணிபாலாஜி, டாக்டர் ஜெ.முகமது பர்வேஸ், டாக்டர் டிகே. பிரபு, கே.கிறிஸ்டி பிரித்வி, எம்.கே.தேன்மொழி பிரசன்னா உள்ளிட்ட குழுவினர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் விவசாயிகள், தொழில் அதிபர்கள் பங்கேற்று தவெக தேர்தல் அறிக்கையில் கொடுக்க வேண்டிய வாக்குறுதி குறித்தான மனுக்களை வழங்கினர்.

அதைத்தொடர்ந்து அறிக்கை குழு தலைவர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எந்த அரசுப் பதவியிலும் இல்லாத விஜய் செய்தது ஊழல் கிடையாது. எதை வைத்து விஜய் ஊழல் செய்தார் என எடப்பாடி பழனிசாமி பேசுகிறார் எனத் தெரியவில்லை. அவரை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

வரி ஏய்ப்பு என பொத்தாம் பொதுவாக கூறக் கூடாது. காலம் தாழ்த்தப்பட்ட ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதை சட்டப்படி எதிர்த்து மனுதாக்கல் செய்தோம். நீதிமன்ற தீர்ப்பு விவகாரத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து முடிவு எடுக்கப்படும். கூட்டணியை நம்பி தவெக தொடங்கப்படவில்லை. இருந்தாலும் கூட்டணி குறித்து இறுதி முடிவை விஜய் அறிவிப்பார்.

அரசியல் கட்சிகள் கூட்டம் நடத்துவது தொடர்பாக வழிக்காட்டல் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் திமுக கூட்டம் நடத்தினால் உடனடியாக அவர்களுக்கு அனுமதி கிடைக்கிறது. தவெகவைப் பார்த்து திமுகவுக்கு பயம் வந்துவிட்டது. அதனால் விஜய் மக்களை சந்திப்பதை தடுக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்கள் (ம) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டன. அருகில் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

# திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்காவில் பக்ரீத், ரம்ஜான் நாட்களில் மட்டும் தொழுகைக்கு அனுமதி: உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி, பிப்.10-
திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தர்கா தொடர்பாக தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், ரம்ஜான், பக்ரீத் ஆகிய பண்டிகை நாட்களில் மட்டும் தர்காவில் தொழுகை நடத்த அனுமதி என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.



திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்காவில் தொழுகை நடத்துவது மற்றும் பலியிடுவது தொடர்பான வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. அதில், நீதிபதி நிஷா பானு, முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தீர்ப்பளித்தார்.

மற்றொரு நீதிபதியான எஸ். ஸ்ரீமதி, மாறுபட்ட தீர்ப்பை அளித்தார். ரம்ஜான், பக்ரீத் மற்றும் பிற இஸ்லாமிய பண்டிகைகளின்போது கந்தூரி பலியிடுவது மற்றும் தொழுகை நடத்துவது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்தினார்.

மேலும், தர்காவில் தொழுகை நடத்துவது சமீபத்தில் தோன்றியது என்று கூறிய அவர், தொழுகைக்காக அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடுவது காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் செல்லும் பாதையைத் தடுக்கும் என்றும், அது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் மற்ற பகுதிகளை ஆக்கிரமிக்கும் என்றும் கூறினார்.

இரு நீதிபதிகளும் இருவேறு தீர்ப்புகளை அளித்ததை அடுத்து, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இறுதித் தீர்ப்புக்காக இந்த வழக்கை மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பினார்.

வழக்கை விசாரித்த மூன்றாவது நீதிபதி, கடந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று அளித்த தீர்ப்பில், ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளின்போது மட்டுமே தொழுகை நடத்த வரையறுக்கப்பட்ட உரிமைகள் உள்ளன என்று தீர்ப்பளித்தார். மேலும், குன்றில் பலியிடும் வழக்கம் குறித்து ஒரு தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யும் வரை, எந்த ஒரு பலியிடுதல், சமைத்தல், அசைவ உணவைக் கொண்டு செல்வது, பரிமாறுவது ஆகியவற்றுக்கு தடை விதித்தார்.

இதனால், உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தர்காவில் வழிபடும் எம்.இமாம் உசேன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் பி.பி வரலே அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், ‘‘தர்கா உள்ள நெல்லித்தோப்பு பகுதி நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்று கூறிய பிறகு, தொழுகை நடத்த கட்டுப்பாடு விதிப்பதா? தொழுகை நடத்துவதால் அந்த பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வந்தது கிடையாது’’ என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி அரவிந்த் குமார், சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருந்திருக்கவில்லை என்றால் அமைதிக் குழு கூட்டம் நடந்திருக்காது என்றும், உயர் நீதிமன்ற உத்தரவு சமநிலையான உத்தரவாகத் தெரிகிறது என்றும் கூறினார். மற்றொரு நீதிபதியான பி.பி.வரலே அதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, ‘‘இந்த உத்தரவில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவு உறுதி செய்யப்படுகிறது’’ என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

# தூய்மை பணியாளர்களுக்கு சுகாதாரமான ஆரோக்கியமான உணவு திட்டத்தை ஊரக அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார்

சின்னாளபட்டி, பிப். 10-
இந்தியாவிலேயே முதன்முதலாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்; சென்னை மாநகராட்சியில் கடந்த 2025ம் வருடம் நவம்பர் மாதம் 15ஆம் தேதி அறிமுகப்படுத்தினார். அதன்படி, ஷிப்ட் முறையில் பணியாற்றும் 30,000க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கு தினமும் மூன்று வேளைகளில் இலவச உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை உணவில் இட்லி, தோசை, பொங்கல் உள்ளிட்ட உணவுகள் வழங்கப்படுகின்றன. மதிய உணவில் சாதம், குழம்பு, காய்கறி, ரசம், தயிர் போன்றவை இடம் பெறுகின்றன. இரவு உணவில் சப்பாத்தி, ரொட்டி போன்ற உணவுகள் வழங்கப்படுகின்றன.



இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், 24 மாநகராட்சிகள், 141 நகராட்சிகள் மற்றும் 479 பேரூராட்சிகளில் பணியாற்றும் மொத்தம் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை போளிவாக்கம் ஊராட்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். அதன் பின்னர் சின்னாளபட்டி பேருந்து நிலையம் அருகில் உள்ள சமுதாயக்கூடத்தில் 80 தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இரா.ராஜா தலைமை தாங்கினார். கோட்டாட்சியர் திருமலை, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், வட்டாட்சியர் முத்துமுருகன், பேரூலீட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான உணவுகளை வழங்கிவிட்டு பேசும்போது சுகாதாரத்தை காக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்கள் நோய் நொடி இல்லாமல் சுகாதாரமாக வாழ நடவடிக்கை எடுத்துவரும் தமிழக முதல்வரின் முத்தான திட்டம்தான் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் என்றார். இதன் மூலம் சுகாதாரப் பணியாளர்கள் நேரம் தவறாமல் உணவு சாப்பிட்டுவிட்டு பணிக்கு வரும்போது முகமலர்ச்சியுடன் வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் வாழும் தூய்மை பணியாளர்கள் அனைவரையும் காக்கும் தாயுமானவராக தமிழக முதல்வர் உள்ளார் என்றார்.

# அனுமதி பெறாத கொடிக் கம்பங்கள் அகற்றக் கோரிய வழக்கு

## 13 மாவட்ட ஆட்சியர்கள் பதிலளிக்க உத்தரவு

மதுரை, பிப்.10-
மதுரை உட்பட 13 மாவட்டங்களில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகளை அகற்றக்கோரிய வழக்கில் 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் பதிலளிக்க உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் சாலி கிராமத்தை சேர்ந்த ராதா கிருஷ்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: “கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, விருதுநகர், மதுரை, தேனி, ராமநாதபுரம், திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, திருச்சி, மற்றும் தஞ்சாவூர் ஆகிய 13 தென் மாவட்டங்களில் ஏராளமான இடங்களில் அனுமதி பெறாமல் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் அரசு புறம்போக்கு இடங்கள், மாநில நெடுஞ்சாலை, கிராமச் சாலைகள் மற்றும் பொது இடங்களில் அரசியல் மற்றும் சாதி அடிப்படையிலான பிளக்ஸ் போர்டுகள், போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. பேனர்கள் கட்டப்படுகின்றன. இவைகளால் தேவையற்ற மோதல்கள் ஏற்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி விதிகளின்படி போஸ்டர்கள் ஒட்டவும், பேனர்கள், போர்டுகள் வைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். அதன்படி எந்த அனுமதியும் பெறப்படுவதில்லை.

அனுமதி பெறாமல் செயல்படுபவர்கள் மீது அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் முறையாக அனுமதி பெறாமல் அரசியல் மற்றும் சாதிய அமைப்புகளின் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகள், பேனர்கள் வைக்கப்பட்டது தொடர்பாக விசாரிக்கவும், அவற்றை அகற்றவும் உத்தரவிட வேண்டும்” இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு இன்று விசாரித்தது. அப்போது நீதிபதிகள், அனுமதி பெறாத பிளக்ஸ் பேனர்கள், கட்சி கொடிக் கம்பங்களை அகற்றுவது தொடர்பாக பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்து வழக்குகள் தாக்கலாகி வருகின்றன. மனு தொடர்பாக 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் 4 வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.




# திசையன்விளை மனோ கல்லூரியில் மத்திய அரசின் பட்ஜெட் மீதான வினாடி வினா போட்டி’

திசையன்விளை, பிப்.10-
திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டம் (National Service Scheme) சார்பில், மத்திய அரசின் பட்ஜெட்டை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தும் நோக்கில் “மை பாரத் – மத்திய அரசின் பட்ஜெட் வினாடி வினா போட்டி” என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கல்லூரி முதல்வர் முனைவர் டி லில்லி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் நாட்டின் பொருளாதார நிலை, அரசின் வரவு-செலவு திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் குறித்த அடிப்படை புரிதலை பெற வேண்டும் என்ற நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வினாடி வினா போட்டியானது மத்திய அரசின் My Bharat இணையதளத்தின் மூலம் நடத்தப்பட்டதாகும். அதில் மத்திய அரசின் பட்ஜெட்டை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 30 கேள்விகள் (Multiple Choice Questions) வழங்கப்பட்டிருந்தன. அந்த வினாக்களுக்கு மாணவர்கள் எவ்வாறு ஆன்லைன் முறையில் விண்ணப்பித்து பதிலளிக்க வேண்டும் என்பது குறித்து நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு தெளிவான பயிற்சி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, My Bharat இணையதளத்தில் பதிவு செய்வது, வினாடி வினா தேர்வை தேர்வு செய்வது, நேர மேலாண்மை மற்றும் பதில்களை சரியாக சமர்ப்பிப்பது போன்ற நடைமுறை விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, கல்லூரியின் அனைத்து நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும் இந்த வினாடி வினா தேர்வை ஆன்லைன் முறையில் உற்சாகத்துடன் எழுதினர்.

இந்த நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் சு. பலவேசகிருஷ்ணன் சிறப்பாக செய்திருந்தார். மாணவர்களிடையே தேசிய பொருளாதாரம், அரசின் பட்ஜெட் செயல்முறை மற்றும் குடிமக்களின் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி மிகப் பயனுள்ளதாக அமைந்தது.

நிகழ்ச்சியின் முடிவில், இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாணவர்களின் அறிவுத் திறனை வளர்ப்பதோடு, நாட்டின் வளர்ச்சியில் அவர்கள் பங்களிப்பை உணரச் செய்கின்றன எனக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருப்பூர், பிப்.10-
மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.



அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 1,006 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.9500/ மதிப்பீட்டில் சக்கர நாற்காலிகளையும், 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.15,570/ மதிப்பீட்டில் சிறப்பு சக்கர நாற்காலிகள் என மொத்தம் 08 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.01 இலட்சம் மதிப்பீட்டில் சக்கர நாற்காலிகள் மற்றும் சிறப்பு சக்கர நாற்காலிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# "சொந்த பட பிரச்சினைக்கே வாய் திறக்காத விஜய்..." செல்லூர் ராஜு விமர்சனம்



மதுரை; பிப்.10-

''சொந்த படப் பிரச்சினைக்கே வாய் திறக்காத விஜய், மக்கள் பிரச்சினைக்கு எப்படி வாய் திறப்பார்?'' என்று அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "துணை முதலமைச்சர் உதயநிதி திட்ட, திட்ட அதிமுகவுக்கு ஆதரவு பெருகிவிட்டது. தமிழக வரலாற்றிலே டிஎன்பிஎஸ்சி தேர்வு கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டதே கிடையாது. இரவு, பகலாக ஆண்டுக்கணக்காக இந்த தேர்வுக்கு படித்த இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணை முதலமைச்சர் பொறுப்பில் உள்ள உதயநிதிக்கு அரசியல் பண்பு தெரியவில்லை. மக்களுக்காக பல போராட்டங்கள் நடத்திய ஆதவ் அர்ஜுனா, தூய்மையின் பிறப்பிடம், தியாகத்தின் பிறப்பிடமான குடும்பத்தில் இருந்து வந்தவர். அதனால், அவர் நியாயம், நீதியை பற்றி பேச வேண்டியதுதான். நாட்டில் உள்ள ஏழை, எளிய மக்களின் ரத்தத்தை அட்டைபோல் உறிஞ்சி வளர்ந்த குடும்பம், அவரது குடும்பம். லாட்டரி சீட்டையே ஜெயலலிதா ஒழித்தார்.

ஆனாலும், மற்ற மாநிலங்களில் லாட்டரி சீட்டை நடத்தி வருகிறார்கள். அவர் அதிமுகவை பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை. ஊடகத்தில் பேசுவது, எக்ஸ் தளத்தில் பதிவுகளை போடுவதோடு அரசியல் முடியவில்லை. மக்களுக்காக போராட்டம் நடத்த வேண்டும்.

நேற்று அரசு தேர்வு எழுத முடியாத மாணவர்கள் நலனுக்காக இவர்கள் எத்தகைய போராட்டங்களை முன்னெடுத்தார்கள்? தனது சொந்த படப் பிரச்சினைக்கே வாய் திறக்காத விஜய், மக்கள் பிரச்சினைக்கு எப்படி வாய் திறப்பார்?" என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்கள், ''பாஜக கூட்டணியில் அதிமுக பத்து கட்சிகளில் ஒரு கட்சி அவ்வளவுதான். எங்களுக்கும் திமுகவுக்குதான் போட்டி'' என்று செங்கோட்டையன் கூறியிருக்கிறாரே? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு செல்லூர் ராஜு, ''அவரை செல்லா காசு என்று சொல்லிவிட்டேன். அந்த செல்லா காசு ஆயிரம் பேசும். அதை நகைச்சுவையுடன் கடந்து சென்றுவிட வேண்டும்'' என்றார்.

ஆனாலும் செய்தியாளர்கள், செங்கோட்டையன் விஜய்யை முதல்வராக்காமல் ஓயமாட்டேன் என்று கூறுகிறாரே என்று கேட்டனர். அதற்கு செல்லூர் ராஜு, "எந்த நாட்டுக்கு முதலமைச்சராக்க போகிறார்? வேண்டுமென்றால் கல்லூரிக்கு முதல்வராக்கலாம்'' என்றார்.

# திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்காவில் பக்ரீத், ரம்ஜான் நாட்களில் மட்டும் தொழுகைக்கு அனுமதி: உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி: பிப்.10-

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தர்கா தொடர்பாக தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், ரம்ஜான், பக்ரீத் ஆகிய பண்டிகை நாட்களில் மட்டும் தர்காவில் தொழுகை நடத்த அனுமதி என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.



திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்காவில் தொழுகை நடத்துவது மற்றும் பலியிடுவது தொடர்பான வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. அதில், நீதிபதி நிஷா பானு, முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தீர்ப்பளித்தார்.

மற்றொரு நீதிபதியான எஸ். ஸ்ரீமதி, மாறுபட்ட தீர்ப்பை அளித்தார். ரம்ஜான், பக்ரீத் மற்றும் பிற இஸ்லாமிய பண்டிகைகளின்போது கந்தூரி பலியிடுவது மற்றும் தொழுகை நடத்துவது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்தினார்.

மேலும், தர்காவில் தொழுகை நடத்துவது சமீபத்தில் தோன்றியது என்று கூறிய அவர், தொழுகைக்காக அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடுவது காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் செல்லும் பாதையைத் தடுக்கும் என்றும், அது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் மற்ற பகுதிகளை ஆக்கிரமிக்கும் என்றும் கூறினார்.

இரு நீதிபதிகளும் இருவேறு தீர்ப்புகளை அளித்ததை அடுத்து, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இறுதித் தீர்ப்புக்காக இந்த வழக்கை மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பினார்.

வழக்கை விசாரித்த மூன்றாவது நீதிபதி, கடந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று அளித்த தீர்ப்பில், ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளின்போது மட்டுமே தொழுகை நடத்த வரையறுக்கப்பட்ட உரிமைகள் உள்ளன என்று தீர்ப்பளித்தார். மேலும், குன்றில் பலியிடும் வழக்கம் குறித்து ஒரு தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யும் வரை, எந்த ஒரு பலியிடுதல், சமைத்தல், அசைவ உணவைக் கொண்டு செல்வது, பரிமாறுவது ஆகியவற்றுக்கு தடை விதித்தார்.

இதனால், உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தர்காவில் வழிபடும் எம்.இமாம் உசேன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் பி.பி வரலே அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், ''தர்கா உள்ள நெல்லித்தோப்பு பகுதி நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்று கூறிய பிறகு, தொழுகை நடத்த கட்டுப்பாடு விதிப்பதா? தொழுகை நடத்துவதால் அந்த பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வந்தது கிடையாது'' என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி அரவிந்த் குமார், சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருந்திருக்கவில்லை என்றால் அமைதிக் குழு கூட்டம் நடந்திருக்காது என்றும், உயர் நீதிமன்ற உத்தரவு சமநிலையான உத்தரவாகத் தெரிகிறது என்றும் கூறினார். மற்றொரு நீதிபதியான பி.பி.வரலே அதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, ''இந்த உத்தரவில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவு உறுதி செய்யப்படுகிறது'' என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

# புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் மலிவு விலை உணவகம் திறப்பு!

புதுச்சேரி: பிப்.10-

புதுச்சேரி அரசுடன் இணைந்து ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் மானிய விலையில் உணவகம் திறக்கப்பட்டது. இது, விரைவில் 24 மணி நேரமும் செயல்படவுள்ளது.

ஜிப்மர் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதுச்சேரி அரசு உணவகத்தை முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்து பயனாளர்களுக்கான சேவையை (பிப்.9) துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர், டாக்டர் வீர் சிங் நேகி, புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழக (PTDC) இயக்குநர் முரளிதரன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இது பற்றி ஜிப்மர் மற்றும் அரசு தரப்பில் கூறும்போது, "ஜிப்மர் வளாகத்தில் அமைந்துள்ள இந்த உணவகம், புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் (PTDC) ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் ஜிப்மர் பணியாளர்களுக்கு குறைந்த விலையில், சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் நோக்கில் இவ்வுணவகம் தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வுணவகம் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படும். விரைவில் 24 மணி நேர சேவையாக விரிவுபடுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் மருத்துவமனை வளாகத்தில் இடையறாத உணவுச் சேவை உறுதி செய்யப்படும். மானிய விலையில் உணவு அனைத்தும் இருக்கும்.

இந்த முயற்சி, ஏழை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளிகளுக்கு மிகுந்த பயன் அளிப்பதுடன், உயர்தர சுகாதார மற்றும் தரநிலைகளை பின்பற்றி, புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது'' என்று தெரிவித்தனர்.

# தேனி நாதக கூட்டத்தில் தகராறு: தவெக செயலாளர், நிர்வாகிகள் மீது வழக்கு

தேனி: பிப்.10-

தேனியில் நாம் தமிழர் கட்சி பொதுக்கூட்டத்துக்கு இடையூறு செய்ததாக தவெக மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட தவெகவினர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



தேனியில் நேற்று முன்தினம் இரவு நாம் தமிழர் கட்சி பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் சாட்டை துரைமுருகன் பேசினார். அவர் பேசும்போது தவெக தலைவர் நடிகர் விஜய்யை கடுமையாக விமர்சித்து பேசியுள்ளார்.

அப்போது பொதுக்கூட்ட மேடைக்கு அருகேயுள்ள தேனி மதுரை சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற தவெகவினர் தொடர்ந்து விசில் அடித்து இடையூறு செய்துள்ளனர். பொதுக்கூட்டம் முடிந்து சாட்டை துரைமுருகன் சென்ற பிறகு, 5 கார்களில் தவெக வினர் அங்கு வந்துள்ளனர்.

அவர்களுக்கும், நாம் தமிழர் கட்சியினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் நடந்தது. இதில் கார் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. இந்நிலையில் தேனி மாவட்ட நாம் தமிழர் கட்சி செயலாளர் ஜெயக்குமார் புகார் அளித்தார்.

அதில், சீமான், சாட்டை துரைமுருகன் ஆகியோர் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு வீடியோ பதிவிட்டதாக லெஃப்ட் பாண்டி மீது ஜன. 24ல் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த முன்விரோதம் காரணமாக லெஃப்ட் பாண்டி தூண்டுதலின் பேரில் தவெகவினர் நாம் தமிழர் கட்சி பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்து தாக்கியதாக கூறியிருந்தார்.

இப்புகாரின் பேரில் தவெக தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் லெஃப்ட் பாண்டி, சின்னமனூர் முகமதுசலாம், கவுதம், தனவேந்தன் உட்பட பலர் மீது தேனி நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களை தேடி வருகின்றனர்.

# சவுக்கு சங்கரின் ஜாமீனை ரத்து செய்ய வேண்டும்: உயர் நீதிமன்றத்தில் காவல் துறை அறிக்கை தாக்கல்



சென்னை: பிப்.10-

மருத்துவ அறிக்கையின்படி அவசர சிகிச்சை தேவையில்லாததால் யூடியூபர் சவுக்கு சங்கரின் ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என காவல் துறை சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிலரை மிரட்டி பணம் பறித்ததாக அளிக்கப்பட்ட புகாரில் கைது செய்யப்பட்ட சவுக்கு மீடியா சிஇஓ வான யூடியூபர் சவுக்கு சங்கருக்கு மருத்துவ காரணங்களுக்காக சென்னை உயர் நீதிமன்றம் 3 மாதங்களுக்கு இடைக்கால நிபந்தனை ஜாமீன் வழங்கியது.

இந்நிலையில், மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் பெற்று, தொடர்ந்து அவதூறான வீடியோக்களை சமூக வளைதளங்களில் பதிவிட்டு வருகிறார் என்றும், ஜாமீன் நிபந்தனைகளை அவர் மீறி செயல்படுவதால், ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என காவல் துறை சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்கில் தொடர்புடைய சாட்சிகளுக்கு மிரட்டல் விடுக்கவோ, பத்திரிக்கை மற்றும் சமூக வளைதளங்களில் பேசி வீடியோ வெளியிடவோ கூடாது என கூடுதல் நிபந்தனைகளை விதித்ததுடன், இவற்றை மீறினால் ஜாமீன் ரத்து செய்யப்படும் என உத்தரவிட்டது.

மேலும், சவுக்கு சங்கரை பிப்.2ம் தேதி முழு உடல் பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கையை பிப்.3 ம் தேதி நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, சவுக்கு சங்கர் தரப்பில் தன்னையும் வழக்கில் சேர்க்கக் கோரி இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, சங்கரின் மனுவுக்கு காவல் துறை தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப் பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, காவல் துறை தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'சவுக்கு சங்கருக்கு அவசர மருத்துவ சிகிச்சை எதுவும் தற்போதைக்கு தேவை இல்லை. 2வது வகை சர்க்கரை நோய் பாதிப்பு மட்டுமே உள்ளது. 2024 ஆம் ஆண்டு இதயத்தில் வால்வுகள் பொருத்தப்பட்டதால் உடல்நிலை சீராக உள்ளது. அதனால், இதய சிகிச்சை தற்போது தேவையில்லை.

நல்ல உடல்நிலையில் இருந்தும் சிகிச்சை என்ற பெயரில் வழக்கில் இருந்து தப்பிக்க முயற்சிக்கிறார். நீதிமன்ற உத்தரவின்படி விசாரணைக்கு இதுவரை எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை. வழக்கு தொடர்பான ஆவணங்களை மறைத்து வருகிறார். அதனால், விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்தது மற்றும் மருத்துவ் அறிக்கை அடிப்படையில் சவுக்கு சங்கரின் ஜாமீனை ரத்து செய்ய வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

அதையடுத்து, நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணையை வரும் பிப்.18க்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளனர்.



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வே.சரவணன், இ.ஆ.ப..அவர்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

# முன்னாள் உதவியாளர் மீது குவியும் புகார்கள்: அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு அரசியல் நெருக்கடி?

மதுரை: பிப்.10-

திமுக அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் முன்னாள் உதவியாளர் ஜெய்பாலாஜி, மனைவியுடன் மோசடி புகாரில் கைதான நிலையில், அவர் மீதான புகார்களும், மோசடி பட்டியலும், 'நியோமேக்ஸ்' போன்று குவிந்து வருவதால், விசாரணை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அதனால், திமுக அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு அரசியல் ரீதியாக நெருக்கடி அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.



மதுரை திமுக அமைச்சர் பழனிவேல் தியாகராஜனிடம் உதவியாளராக இருந்து கடந்த ஓராண்டுக்கு முன்பு நீக்கப்பட்டவர் மதுரை கலைநகர் பகுதியைச் சேர்ந்த ஜெய்பாலாஜி(42). இவரும், இவருடைய மனைவி கலாவதியும் பணம் மோசடி, வீட்டுமனைகளை ஏமாற்றி வாங்கியது, ரியல் எஸ்டேட் தொழில் என்ற போர்வையில் பொதுமக்களிடம் தவணை முறையில் பணம் வசூலித்து மோசடி செய்தது போன்ற பல்வேறு வழக்குளில் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர்.

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பெயரை பயன்படுத்தி ஜெய்பாலாஜி சேர்த்த சொத்து விவரம், செய்த மோசடிகளை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் சேகரித்து வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக, தற்போது அமைச்சரிடம் உதவியாளராக பணிபுரியும் இரு உதவியாளர்களை வரவழைத்து மத்திய குற்றப்பிரிவு அலுவலகத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக விசாரணை நடந்தது.

ஆளுங்கட்சி அமைச்சரிடம் வெறும் உதவியாளராக இருந்த ஒருவர், கணக்கில் அடங்காத சொத்துகளை குவித்து இருப்பது, கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து இருப்பது, தனிநபராக அவர் மட்டுமே இந்த மோசடி செயல்களில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை என்று போலீஸார் சந்தேகிக்கிறார்கள்.

அதனால், அவருக்கு உதவியதாக சந்தேகிக்கப்படும் அரசு அதிகாரிகள், அரசியல் புள்ளிகள் பட்டியலை சேகரித்து அவர்களை போலீஸார் விசாரணைக்கு அழைக்கத் தொடங்கி உள்ளனர். போலீஸாரின் இந்த விசாரணை, தற்போது அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய குற்றப்பிரிவு போலீஸார் கூறுகையில், 'மோசடி புகாரில் கைது செய்யப்பட்டுள்ள ஜெய்பாலாஜி கடந்த 2013ல் அவரது பெயரில் ' மருதம்' என்ற ரியல் எஸ்டேட் நிறுவனமும், தனது மாமா பெயரில்' மதுரம்' என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தை தொடங்கி நடத்தி இருக்கிறார். இவற்றின் மூலம் ஏராளமான வாடிக்கையாளர்களை சேர்த்துள்ளார். குறைந்த விலையில் வீட்டு மனைகள் வழங்குவதாக பணம் வசூலித்துள்ளார். பணம் செலுத்தியவர்களுக்கு முறையாக வீட்டு மனைகளை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது.

இவரது ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் மூலம் மதுரை, ராமநாத புரம், சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், ஈரோடு, வேலூர், சேலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே பொருளாதார குற்றத்தடுப்பு, மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகங்களிலும் புகார்கள் கொடுத்துள்ளனர். இது தொடர்பான தகவல்களை சேகரிக்கும்போது, 'குட்டி நியோமேக்ஸ்' ரியல் எஸ்டேட் மோசடி போன்று ஜெய்பாலாஜி மீதான புகார்கள் அதிகரிக்கிறது.

மதுரம், மருதம் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் விசாரிக்க அழைப்பு விடுத்துள்ளோம். ஜெய்பாலாஜி மக்களிடம் வசூலித்த தொகை சுமார் ரூ.150 கோடியை தாண்டும் எனத் தெரிகிறது. ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் நடத்திய ஒருவர், அமைச்சரின் உதவியாளராக எப்படி இருக்க முடிந்தது.

ஒருவேளை அமைச்சருக்கு தெரிந்தே அவர் செயல்பட்டாரா என்ற கேள்விகளும் தற்போது எழுந்தன. இது தொடர்பாக அமைச்சரிடம் தற்போது உதவியாளர்களாக இருக்கும் தனசேகரன், வருண் ஆகியோரிடம் ஜெய்பாலாஜி, அவரது நிறுவனங்கள் குறித்து பல்வேறு தகவல்களை திரட்டியுள்ளோம். இவ்வழக்கில் மேலும் சிலர் சிக்க வாய்ப்புள்ளது' என்றனர்.



# எடப்பாடியார் பிறந்த நாளை முன்னிட்டு வில்லேஜ் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள்

திருப்பூர், பிப்.10-

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சி தலைவி அம்மா கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பூர் புற நகர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பொள்ளாச்சி ரோடு, வடுகபாளையம் கிரிக்கெட் மைதனத்தில் திருப்பூர் புற நகர் மேற்கு மாவட்ட கழக செயலாரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன், அவர்களது வழி கட்டுதல்படி, வில்லேஜ் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் இரண்டு நாட்கள் நடைபெற்றது. போட்டில் வெற்றி பெற்ற கிரிக்கெட் டீம் முதல் பரிசு பெற்றவர் விக்கிராக்ஸ் அணியினருக்கும், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.எம். பிரனேஷ் அவர்கள் பரிசு கோப்பை மற்றும் ரூ.50,000/ ரூபாய் இரண்டாம் பரிசு ரோகிஸ் அணியினர், ரூ.40,000/ பரிசு கோப்பைகளை சி.எம். கிரின் இந்தியா பிரைவேட் லிமிடெட், வழங்கினார்கள் மூன்றாம் பரிசு ரூ.25,000/ பரிசு கோப்பைகளை M.R.இன்டஸ்ட்ரீ (அ) பம்பஸ் வழங்கினார், நான்காம் பரிசு ரூ.25,000/ பரிசு கோப்பையை ராயல் ஹோட்டல் வழங்கினார்கள்.

கிராமபுற இளைஞர்கள் விளையாட்டு துறையில் வளர வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை மற்றும் பொருளாதார உதவிகள் செய்து வரும் தொழில் அதிபர் சி.எம்.பிரனேஷ், குடிமங்கலம் மற்றும் உடுமலை சுற்றுப்பகுதிகள், விளையாட்டு போட்டிகள், மற்றும் ஏழை, எளிய மாணவர்கள் கல்வி ஊக்கத்தொகை, அன்னதானங்கள், சமூக பணிகளை செய்து வரும் உன்னத மனிதர் சி.எம். பிரனேஷ் பணி தொடர கிரிக்கெட் கிளாப் நிர்வாகிகள் வாழ்த்தினார்கள்.

# தென்காசி 4வது பொதிகை புத்தகத் திருவிழா மாவட்ட ஆட்சியர் தலைமையில் நிறைவு



தென்காசி, பிப்.10-

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 4 வது பொதிகை புத்தகத்திருவிழாவின் நிறைவு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார் (தென்காசி), ஈ.ராஜா (சங்கரன்கோவில்), மரு.தி.சதன் திருமலைக் குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், நான்காவது ஆண்டாக நடைபெறும் பொது புத்தக திருவிழா 10 நாட்கள் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்தப் பத்து நாட்களும் தலைசிறந்த இலக்கியவாதிகள் பேச்சாளர்கள் கவிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மிகச்சிறந்த உரையை வழங்கினார்கள். தொடக்கத்தில் மக்கள் கூட்டம் குறைவாக இருந்தாலும், பிறகு மக்கள் வெள்ளமென திரண்டு வந்து அதிக அளவில் புத்தகங்களை வாங்கியதோடு பேச்சாளர்களுக்கு ஊக்கப்படுத்தும் வகையில் பெருமளவில் கலந்துகொண்டு அரங்கத்தை தாண்டி நின்று கொண்டு மக்கள் நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் ரசித்தார்கள். 10 தினங்கள் நடைபெற்ற 4 ஆவது பொதிகை புத்தகத் திருவிழாவில் ரூ.1,03,84,380 ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகியுள்ளது. தொடர்ந்து இரண்டாம் ஆண்டின் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் புத்தகங்கள் விற்பனையாவது மிகப்பெரிய சாதனையாக அமைந்ததை காட்டுகிறது. மேலும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழா நடைபெற தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 30.01.2026 முதல் 08.02.2026 வரை பத்து நாட்கள் நடைபெற்ற புத்தகத் திருவிழா மிகப்பெரிய வெற்றி அடைவதற்கு பாடுபட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்.இ.ஆ.ப. தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் முனைவர். ரா.இராஜ்மோகன்.இ.வ.ப, மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயசந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் விஜயலெட்சுமி, தென்காசி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஷேக்அப்துல்லா, மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணி புரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட காமராஜர் மண்டபத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு உணவுகளை வழங்கினார். உடன் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி. சதன் திருமலைகுமார், புளியங்குடி நகர் மன்ற தலைவர் எஸ். விஜயா, ஆணையாளர் பா. நாகராஜ் ஆகியோர் உள்ளனர்.




■ ஈரோடு மாவட்ட ஆயுத படை வளாகத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் வசிக்கும் காவலர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு, கல்வியை மேம்படுத்தவும், அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், பெற்றோர்களின் நேரங்களை பயனுள்ளதாக மாற்றவும், மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், பொது நூலகம், கேரம் போர்டு மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுச் சாதனங்கள் அடங்கிய தனி அறையும், மாவட்ட கண்காணிப்பாளர் ஐபிஎஸ் திறந்து வைத்தார். மேலும் நிகழ்ச்சியில் ஆயுதப்படை வளாக முதல் கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



■ சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன், சேலம் மாநகர மேயர் ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோ, 4வது கோட்டம் மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி சேகர் ஆகியோர் மக்களிடம் குறைகளை கேட்டு, சாலை மற்றும் சாக்கடை வசதிகள் விரைவில் சரி செய்து தருவதாக அப்பகுதி பொதுமக்களிடம் உறுதியளித்தனர்.

# “பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார்; ஆனால்...” அமைச்சர் ரகுபதி



சென்னை, பிப்.10-

“பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார், ஆனால் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார்” என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார். ஏனென்றால் தமிழர்கள் அதிகளவில் மலேசியாவில் இருக்கிறார்கள். ஆனால் பிரதமர் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார். பிஹாருக்கு சென்றாலும் தமிழனை திருடன் என்பார். ஆனால் அவர் வெளிநாட்டுக்கு சென்றால் தமிழர்கள் இணைப்பு பாலமாக இருப்பவர்கள் என்பார்.

தமிழகத்தில் கொண்டாடுவதை போல மலேசியாவிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாக கொண்டப்படுகிறது. அங்கே இருப்பவர்கள் மதம், இனம் பாராமல் அனைவரும் தமிழ் கடவுளாக முருகனை ஏற்றுக்கொண்டு விழாவை நடத்துகிறார்கள். இதையெல்லாம் பார்த்து தான் பிரதமர் மோடி இவ்வாறு பேசுகிறார்.

தமிழ் கடவுள் முருகனை வணங்குகின்றவர்களுக்கு திராவிட மாடல் குறித்து புரியும். தங்களுக்கு பாதுகாப்பு திராவிட மாடல் ஆட்சி தான் என உணர்ந்தவர்கள்தான் தமிழக முருக பக்தர்கள்.

அமெரிக்கா இந்தியா ஒப்பந்தத்தால் அமெரிக்காவுக்கு தான் நலனே தவிர, இந்தியாவுக்கு கிடையாது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்கினால் 50 டாலர் என்றால் அமெரிக்காவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கினால் 55 டாலர். இதனால் அம்பானிக்கும் அதானிக்கும் தான் ஆதாயம். எந்த விஷயத்திலும் பிரதமர் மோடியின் இறுதி முடிவை பார்த்தால், அதானி அம்பானிக்கு மிகுந்த பொருளாதார வளத்தை பெருக்கி தரக்கூடியதாகவே இருக்கும்.

தவெகவுக்கு 42 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக செங்கோட்டையன் கூறுகிறார். செங்கோட்டையனுக்கு அரசியல் குறித்த புள்ளி விவரங்கள் தெரியாது. அவருக்கு மக்களின் மனதை அறியத் தெரியாது.

எடப்பாடி பழனிசாமி எப்பொழுதுமே கனவு கண்டு கொண்டிருப்பவர் என்பது நாடறிந்த உண்மை. அன்புமணி ராமதாஸ் மருத்துவத்தை பற்றி ஏதாவது கூறியிருந்தால் பரவாயில்லை, அவர் பொருளாதார நிபுணரும் அல்ல; மேதையும் அல்ல. பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பான இடத்தை கொடுத்திருக்கிறது தமிழக அரசு. தமிழகம் இந்திய பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறது.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ மதுரை கூடல்புதூர் பகுதியில் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி இன்ஸ்டியூட் ஆப் செல்ப் டெவலப்மென்ட் ஆதி கிறிஸ்தவர் கூட்டமைப்பு சமூக சமய நல்லிணக்க கூட்டமைப்பு செழிகியன் பல் மருத்துவமனை சார்பாக இலவச பல் மற்றும் காது மூக்கு தொண்டை இலவச முகாம் நடைபெற்றது . மாநிலத் தலைவர் வர்த்தக அணிதமிழ் மாநில பகுஜன்சமாஜ் கட்சி பி.டி சேகர், மாநில துணை பொதுச் செயலாளர் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி வழக்கறிஞர் மார்க்ஸ் ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தனர். இம் முகாமில் கூடல் புதூர் சுற்றியுள்ள பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர் . நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆதி கிறிஸ்தவ கூட்டமைப்பு பொதுச்செயலாளரும் சமூக சமய நல்லிணக்க கூட்டமைப்பு மதுரை மாவட்ட தலைவரும் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் சிறுபான்மை பிரிவு மாநில தலைவருமான செபாஸ்டின் ராஜ் சிறப்பாக செய்திருந்தார்.

# கல்குவாரிகள் செயல்படத் தடை கோரிய வழக்கில் மதுரை ஆட்சியர் பதிலளிக்க உத்தரவு



மதுரை, பிப்.10-

மதுரை மாவட்டம் கல்லாணை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கல்குவாரிகள் செயல்படத் தடை கோரிய வழக்கில் மதுரை ஆட்சியர், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சுற்றுச் சூழல் பொறியாளர் பதில் தர ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. விதிகளை மீறிய குவாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்லாணை சுப்பிரமணியன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.



# கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏழு தழுவுதல் அரங்கில் திருப்பரங்குன்றம் தொகுதி ஜல்லிக்கட்டு போட்டி

அலங்காநல்லூர் பிப்.10-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி சார்பாக, ஜல்லிக்கட்டு போட்டியினை வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி கலந்துகொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் வருவாய் கோட்டாட்சியர் ஜோதி, சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மற்றும் வழக்கறிஞர் பாலாஜி, தெற்கு திமுக ஒன்றிய செயலாளர் வேட்டையன், அலங்காநல்லூர் வட்டார மருத்துவர் வளர்மதி, சமயநல்லூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ், அலங்காநல்லூர் காவல் ஆய்வாளர்(பொறுப்பு) செல்வம், மருத்துவத்துறையினர், வருவாய்த்துறையினர், காவல்துறையினர் கலந்து கொண்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000